விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்– 12.02 p.m
விசாரணை முடிக்கப்பட்ட நேரம் –12.36 p.m

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, METTUR**
**Case No :MC.No.2/2024**

Petitioner side witness : ம.சா.2 Date : 26.12.2024

| | |
|---|---|
| Name : சுப்பிரமணி | Taluk : தர்மபுரி |
| Father Name : - | Calling : திருமணதரகர் |
| Village : தர்மபுரி | Age : 62 |

(Petitioner and Respondent present.)

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

நான் திருமண தரகராக தொழில் செய்து வருகிறேனா என்றால் இல்லை. மனுதாரரை நான் தான் எதிர்மனுதாரருக்கு ஏற்பாடு செய்தேனா என்றால் எதிர்மனுதாரர் வீட்டில் நங்கவள்ளியில் பெண் இருப்பதாக கூறி பார்க்கலாம் என்று சொன்னார்கள். பெண் வீட்டாரை எனக்கு திருமணத்திற்கு முன்பு தெரியாது என்றால் சரிதான். திருமண பேச்சுவார்த்தையின் போது நான் சென்றேனா என்றால் சென்றேன். எதிர்மனுதாரர் ஹரிபிரபாகரன் எனக்கு சொந்தமா என்றால் சொந்தம் இல்லை. எதிர்மனுதாரரின் அப்பா எனக்கு நண்பர், ஒரு ஊர்க்காரர். என்னை எதிர்மனுதாரரரோ அல்லது அவரது பெற்றோரோ என்னை நகை வாங்கி தர சொல்லி எப்போது கேட்கவில்லை என்றால் சரிதான். நகை, பணம் சம்மந்தமாக எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. தெரியும். என்னை வைத்து 101 பவுன் நகை பெட்டியில் வைத்துக்கொடுத்தார்கள். எத்தனை பவுன் நகை என்று நான் எடைப்போட்டு பார்க்கவில்லை என்றால் சரிதான். எடைப்போட்டு யாரும் கேட்கவும் இல்லை.

காண்பிக்கவும் இல்லை. என்ன என்ன நகை, எத்தனை பவுன் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எதெரியாது. கார் வாங்கிக்கொடுப்பதற்காக ரூ.10 லட்சம் கொடுத்ததாக எனது பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் ஆனால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னை வைத்து எந்த தொகையும் கொடுக்கவில்லை. சீர், செனத்தி என்ன செய்தார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் லாரியில் வைத்து பொருட்களை கொண்டு வந்தார்கள். ஆனால் என்ன பொருட்கள் என்று எனக்கு தெரியாது. நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் திருமணத்திற்கு முன்னரும், திருமண சமயத்தில் எதிர்மனுதாரரின் பெற்றோர்களும், எதிர்மனுதாரரும் நகை வாங்குவதில்லையே குறியாக இருந்தார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. ஆனால் 101 பவுன் கேட்டார்கள். திருமண தரகர் பெண்வீட்டில் 101 பவுன் நகை போடுவதாக எதிர்மனுதாரர்களின் பெற்றோரிடம் சொல்லியிருந்தார். அது உண்மையா என்று என்னை கேட்க சொன்னார்கள். மேற்படி திருமண தரகர் சொன்னது உண்மையா, இல்லையா என்று நேரடியாக கூறச்சொல்லி எதிர்மனுதாரரின் பெற்றோர்கள் கேட்டார்கள். எனக்காக அரைமணி நேரம் காத்திருந்து 101 பவுன் நகை என் முன்னிலையில் 1–ம் மனுதாரருக்கு அவரது பெற்றோர்கள் கொடுத்தார்கள். அந்த நகை தற்போது யாரிடம் உள்ளது என்று எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. என்னை வைத்து கொடுக்கவில்லை. எத்தனை மாதம் 1–ம் மனுதாரரும், எதிர்மனுதாரரும் தருமபுரியில் குடியிருந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சென்னை சென்று எவ்வளவு காலம் குடியிருந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 1–ம் மனுதாரரும், எதிர்மனுதாரரும் எவ்வாறு

வாழ்ந்தார்கள், சந்தோஷமாக வாழ்ந்தார்களா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலம் பாரா 3—ல் "1—ம் மனுதாரருக்கு சிறு உடல் பிரச்சினை இருந்ததால் அதை பொறுத்து 1—ம் மனுதாரரின் பெற்றோர் கேட்டபோது எதிர்மனுதாரரின் தந்தை மனுதாரர்களை மருத்துவமனை அழைத்து சென்று சிகிச்சை பார்த்து கவனித்துக்கொள்வதாக கூறிவிட்டு தான் அவர்களை கூட்டிச்சென்றார் என்றும், ஆனால் அவர்கள் அவ்வாறு நடந்துக்கொள்ளவில்லை என்றும், 1—ம் மனுதாரர் என்னை தான் போனில் அழைத்து விசயத்தை கூறியதாகவும், நான் அவரை அழைத்துக்கொண்டு வந்து அவரை அவரது பெற்றோர் வீட்டில் விட்டுவிட்டேன் என்று கூறியுள்ளது" உண்மையல்ல என்றால் சரிதான். அவ்வாறு நான் கூட்டிச்செல்லவில்லை. 1—ம் மனுதாரர் விபத்தில் அடிப்பட்ட விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். கைகளைப்பு நடந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நங்கவள்ளி காவல்நிலையத்தில் புகார் கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். நானும் சென்றிருந்தேன். என்னை போன் மூலம் அழைத்தார்கள். தருமபுரியிலிருந்து காரில் சென்றேன். இன்றும் சாட்சியம் அளிக்க காரில் தான் வந்தேன். என்னுடைய சொந்த கார். எதிர்மனுதாரர் தருமபுரி குடும்ப நல நீதிமன்றத்தில் தாக்கல் செய்த HMOP.No.88/2023 வழக்கு பற்றி எனக்கு தெரியுமா என்றால் எதுவும் தெரியாது. அந்த வழக்கு நிலுவையில் இருக்கும்பொழுது 1—ம் மனுதாரரின் அம்மா, அப்பா, அண்ணன், தம்பி, பெரியப்பா மற்றும் சிலர் 1—ம் மனுதாரருடன் எதிர்மனுதாரரின் வீட்டிற்கு சென்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 1—ம் மனுதாரர் எனக்கு போன் செய்தார். உடனே நான் அங்கு சென்றிருந்தேன். 1—ம் மனுதாரர் தற்கொலை ஏதேனும்

செய்துக்கொள்வாரா என்று பயத்தில் நான் என் வீட்டிற்கு அழைத்து சென்றுவிட்டேன். அதன் பின்னிட்டு அவரது பெற்றோருக்கு போன் செய்து வரவழைத்து அனுப்பி வைத்தேன். மேற்சொன்ன விவரத்தை எனது பிரமாண வாக்குமூலத்தில் நான் சொல்லவில்லை. எதிர்மனுதாரர் வீட்டிற்கு எத்தனை பேர் சென்றார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. வக்கீல்கள் சென்றார்களா என்றால் அதுவும் தெரியாது. நான் செல்லும்போது யார் இருந்தார்கள் என்றால் 1–ம் மனுதாரர் மற்றும் அவரது அப்பா, அம்மா மற்றும் எதிர்மனுதாரர் அவரது அப்பா, அம்மா இருந்தார்கள். காவல்நிலையத்தில் என்ன நடந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் தெரியும். நான் நங்கவள்ளி காவல்நிலையத்திற்கு மட்டும் தான் சென்றேன். தருமபுரி காவல்நிலையத்திற்கு நான் செல்லவில்லை. எதிர்மனுதாரர் சேர்ந்து வாழவேண்டும் என்று வழக்கு போட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில் போடப்பட்ட வழக்கு பற்றி தெரியுமா என்றால் தெரியாது. இந்நீதிமன்றத்தில் எதற்காக வழக்கு போடப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் நகையை திருப்பி தரச்சொல்லி போடப்பட்டுள்ளது. 1–ம் மனுதாரின் பெற்றோர்கள் சீர், செனத்தி எல்லாம் திருப்பி வாங்கிக்கொடுங்கள் என்று என்னை கேட்டார்களா என்றால் ஆமாம். நான் எதிர்மனுதாரரின் பெற்றோரிடம் கூறினேன். எதிர் மனுதாரரின் பெற்றோர்கள் 1–ம் மனுதாரர் தரப்பினர் வரட்டும் என்று கூறினார்கள். மனுதாரரும், எதிர்மனுதாரரும் சேர்ந்து வாழ வைக்க நான் எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றால் சரிதான். அது அவர்கள் பிரச்சினை என்று அவர்கள் பார்த்துக்கொள்ளட்டும், அவர்கள் விவகாரத்து பெறுவது, கொடுப்பது அவர்கள் பிரச்சினை என்று கூறிவிட்டுவிட்டேன்.

மனுதாரர்களை பராமரிக்க எண்ணமின்றி எதிர்மனுதாரர் வாழ்ந்து வருகிறார் என்று நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் கூறவில்லை. எதிர்மனுதாரர் தன்னுடைய கடமையில் இருந்து தவறிவிட்டார் என்றும், சட்டப்படியும், தர்மபடியும் 1–ம் மனுதாரரின் ஆயுள் உள்ள வரைக்கும் 2–ம் மனுதாரர் மேஜர் வயது அடையும் வரையிலும் பராமரிக்கும் கடமை எதிர்மனுதாரருக்கு உள்ளது என்று கூறியுள்ளேன் என்றால் தவறு. நான் எதிர்மனுதாரருக்கும், அவரது பெற்றோர்களுக்கும் எதிராக உண்மைக்கு புறம்பான சங்கதிகளை எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்னேன் என்றால் சரியல்ல.

**விசாரணை முடிக்கப்பட்டது.**

**ஒம்/–அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர்.1,**
**மேட்டூர்.**